www.tamilarangam.net

# சந்ததியார் கடத்தப்பட்டார்

## PLOTன் தொடரும் பாசிச வெறியாட்டம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) முன்னாள் அரசியல் செயலர் தோழர் சந்ததியார் (வசந்தன்) செப்டெம்பர் 18, 1985 அன்று சென்னையில் PLOT ன் உளவுப் படையினரால் கடத்தப்பட்டார் PLOT ன் ஸ்தாபகர்களுள் ஒருவரான தோழர் சந்ததியார் PLOT னுள் நிலவிய முறைகேடுகளுக்கெதிராக PLOT ன் செயலதிபர் உமாமகேஸ்வரனுடன் நீண்டகாலமாக முரண்பட்டிருந்தார்:

- PLOT ல் உமாமகேஸ்வரனின் தனிநபர் எதேச்சதிகாரமும் அவர் தன்னைச் சுற்றி உருவாக்கிக் கொண்ட தலைமைவழிபாடும், குழுவாதமும்.
- PLOT நடவடிக்கைகளை, உமாமகேஸ்வரனை விமர்சித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக PLOT ன் பயிற்சி முகாம்களில் தோழர்களுக்கெதிராக நடாத்தப்பட்ட சித்திரவதைகளும் படுகொலைகளும்
- PLOT ன் நிதிப்பொறுப்புகளை தனது கையிலெடுத்துக்கொண்டு உமாமகேஸ்வரன் இன்று வரை வரவு செலவு கணக்குகளை PLOTன் அரசியல் குழுவிற்கோ மத்திய குழுவிற்கோ சமர்ப்பிக்காமல் நிதி மோசடியில் ஈடுபட்டமை; வெளிநாட்டில் நிதிசேகரிப்பு, ஆயுதக் கொள்வனவு, பயிற்சி முகாம் செலவுகள் போன்றவற்றில் ஊழலும் மோசடியும்,
- உமாமகேஸ்வரனால் பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் புரிந்த ஊழல்கள் நிதி மோசடிகள், பாலியல் குற்றங்கள் போன்றவற்றை அம்பலப்படுத்தி விமர்சித்து PLOT இலிருந்து தூக்கியெறிய விடாது பாதுகாத்தமை.
- PLOT ன் கொள்கைக்கு முரணாக, PLOT உறுப்பினர்களுக்கு தெரியாமல் இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் போதைப்பொருள் கடத்தலில் உமாமகேஸ்வரன் ஈடுபட்டமை
- PLOT ன் மத்திய குழுவிற்கோ ஏனைய தோழர்களுக்கோ தெரியாமல் இரகசியமாக இந்தியாவில் ஊட்டியில் பாரிய தேயிலைத் தோட்டங்களிலும்; பம்பாயில் ஹோட்டல்களிலும், செங்கல்பட்டு என்னுமிடத்தில் பஸ் கம்பனியொன்றிலும், பல வெளிநாட்டு வங்கிகளிலும், உமாமகேஸ்வரன் தனது பெயரிலும், தனது மனைவியின் பெயரிலும் பெருமளவு பணத்தை முதலீடு செய்தமை.
- PLOT ன் மத்திய குழுவிற்கே தெரியாமல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டமை.
- PLOT ன் மத்திய குழுவின் அனுமதியின்றி உளவுப்படை என்றபெயரில் தனது முழுக் கட்டுப் பாட்டின் கீழ் ஒரு படையை உருவாக்கி PLOTஇனுள்ளும், ஏனைய இயக்கங்களை சேர்ந்த தோழர்களுக்குமெதிராக பல சித்திரவதைகளையும் கொலைகளையும் செய்தமை.
- PLOT ன் உளவுப்படையின் அராஜக நடவடிக்கைகள் பற்றிய கேள்விகளை மத்திய குழுவில் எழுப்பிய தோழர்களுக்கு பொய்களைக் கூறி உமாமகேஸ்வரன் நடவடிக்கைகளை நியாயப்படுத்தியமை.

இந்த அநீதிகளைத் தட்டிக்கேட்டு தோழர் சந்ததியார் போராடியதனால் வெறுப்பும் ஆத்திரமும் கொண்ட உமாமகேஸ்வரன் இயக்கத்தை பிளவுபடுத்த தோழர் சந்ததியார் சதிசெய்கிறார் என்று அபாண்டமான குற்றச்சாட்டை கட்டவிழ்த்து விட்டார். இதனை நிரூபிக்க உமாமகேஸ்வரனின் உளவுப்படை பயிற்சி முகாமில் உள்ள தோழர்கள் பலரை சித்திரவதை செய்து தோழர் சந்ததியாருக்கு எதிரான வாக்கு மூலங்களை தயார் செய்தார்கள் இந்நிலையில் மனம் சலிப்படைந்த தோழர் சந்ததியார் ஆகஸ்ட் 84இல் PLOT இலிருந்து வெளியேறினார். பின்னர் அவர் சென்னையில் இலங்கை அகதிகளின் புனர்வாழ்வு சேவையில் ஈடுபட்டுவந்தார்

பெப்ரவரி 1985ல் தோழர் சந்ததியாரை PLOT இலிருந்து ஒதுங்கியிருப்பதற்கு இடமளிக்கக்கூடாது, சந்ததியாரை சும்மாவிட்டால் தமது சுயமைகளுக்கெதிராக பிரச்சாரம் செய்வார் என்ற பயத்தில் உமாமகேஸ்வரனின் தூண்டுதலின் பேரில் உளவுப் படையின் முக்கியஸ்தர்கள் தோழர் சந்ததியாருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்று மத்திய குழுவில் முன்மொழிந்தார்கள்.

நாம் இதனைக்கண்டித்து எதிர்த்து வாதிட்டோம். PLOT ல் இருந்து எவரும் விலகுவதற்கும் பிறிதொரு இயக்கம் ஆரம்பிப்பதற்கும் அல்லது விரும்பிய இயக்கத்தில் சேருவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. தோழர் சந்ததியார் மீதான குற்றச்சாட்டுகள் அவர்மீது தனிப்பட்ட பகைமைகொண்ட உளவுப் படையினராலேயே சுமத்தப்பட்டது நடாத்தப்பட்ட விசாரணை கூட முழுமையானதல்ல. இந்நிலையில் சந்ததியாருக்கு மரணதண்டனை விதிப்பது உமாமகேஸ்வரன் போன்றவர்களது தனிப்பட்ட சுயநலத்தினால் உருவானது என்று கண்டித்தோம். இதனால் சந்ததியார் மீது நடவடிக்கை எடுக்கும் உமாமகேஸ்வரனின் முயற்சி தடுக்கப்பட்டது.

இதன்பின்பு நாம் PLOT இலிருந்து வெளியேறி PLOT ல் நிலவும் ஊழல்களையும் அநீதிகளையும் உளவுப்படையின் கொடுமைகளையும் மக்களுக்கு அம்பலப்படுத்தினோம் தமது உண்மைச் சொரூபம் அம்பலமானது பொறுக்க மாட்டாமல் PLOT இன்று தோழர் சந்ததியாரைக் கடத்தியுள்ளார்கள். பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைக்குக்கூட மீட்சியுண்டு. ஆனால் தம்மை 'மொசாட்' என அழைப்பதில் பெருமை காணும் PLOT உளவுப்படையிடம் பிடிபட்டவர்கள் மீண்டதாக வரலாறு இல்லை.

தோழர் சந்ததியாரை சித்திரவதை செய்வதற்கும் கொலை செய்வதற்கும் உரிமை உண்டு, எனக் கொக்கரிக்கும் இவர்கள் தமது இந்த வீராவேசமான நடவடிக்கைகள் குறித்து வெளியில் வஞ்சக மௌனம் சாதிக்கும் கயமைகளை தமிழீழ மக்கள் அறிவார்கள். அண்மையில் தோழர்கள் செல்வன் அகிலன் ஆகியோரை PLOT கடத்திய போது, செல்வன் அகிலன் ஆகியோரை விசாரித்த பின்பு விடுதலை செய்வதாக அமைப்பு தோழர்களுக்கு கூறியுள்ளார்கள். பின்னர் அவர்களை பிடித்த இடத்திலேயே கொலை செய்துவிட்டதாக அமைப்பினுள் இரகசியமாகக அறிவிக்கும் கொடுமைகள் நாகரீக உலகம் நாணித்தலை குனியும் நடவடிக்கைகளாகும் அந்த வகையில் இன்று தோழர் சந்ததியாரைக் கடத்திய பின்பும், எதுவும் தெரியாத அப்பாவி போல கையை விரிக்கின்றார்கள். கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடிக்கும் பூனை கூட இனிமேல் PLOT இடம் தான் பாடம் கேட்க வேண்டும்.

புரட்சிகர வார்த்தை அலங்காரங்களால் தன்னை போராட்ட தாபனமாகப் பறைசாற்றித் திரியும் PLOT இன்று சிறிலங்கா அரசிற்கும் இராணுவத்திற்கும் எதிராக முன்னெடுத்த போராட்டத்தை காட்டிலும் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் எதிராக நடத்திய கொடூரங்களும் அநீதிகளும் அதிகமானவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

PLOT பயிற்சி முகாமில் இன்று நூற்றுக்கணக்கான தமிழீழ விடுதலைப் போராளிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். கொல்லப்பட்ட இத்தோழர்கள் எந்தப் பாவமும் அறியாத அப்பாவிகளாவர். இன்று ஏற்பட்டுள்ள போர் நிறுத்தத்தை சாதகமாகக் கொண்டு PLOT தனது தலைமையின் கொடுமைகளைத் தட்டிக் கேட்கும் தமிழீழ விடுதலைப் போராளிகள் அனைவரையும் கொன்றொழிக்கும் செயலை நடைமுறைப் படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நவீன பாசிசத்தை PLOT மும்முரமாக அரங்கேற்றுகிறது

PLOT இனால் கடத்தப்பட்ட தோழர் சந்ததியார் 1970 ம் ஆண்டு காலத்தில் மாணவப்பருவத்திலேயே அரசியலில் நுழைந்தவராகும். அன்று சிறிலங்கா அரசின் இனரீதியான தரப்படுத்தலுக் கெதிரான போராட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டார் அக்காலத்தில் புரட்சிகர இளைஞர்களின் குரலாக ஒலித்த சந்ததியார், புரட்சிகர இளைஞர்களின் செயல்பாடுகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வந்தார். 1975 ல் அல்பிறட் துரையப்பா கொலை செய்யப்பட்டதையடுத்து இவர் கைதாகி சிறிலங்கா சிறைகளில் கொடிய சித்திரவதைக்குள்ளான பின்பு விடுவிக்கப்பட்டார் சிறையில் இருந்து விடுதலையான பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளராக பணிபுரிந்தார். 1977 ல் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையின் அபிப்பிராய வாக்கெடுப்பு என பிரகடனஞ் செய்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்கு தோழர் சந்ததியாரும் அவர் சார்ந்த இளைஞர் பேரவையும் கடுமையாக உழைத்தார்கள். 1977 பொதுத் தேர்தலின் வெற்றியின் பின்பு திரு அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராகி ஜே ஆருடன் சல்லாபித்து உலகச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு விடுதலைக்கு துரோகமிழைத்த போது தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள் முதன் முதலில் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர் தோழர் சந்ததியாராவர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தனத்தை விமர்சித்து இளைஞர் பேரவையில் இருந்து வெளியேறிய குழுவிற்கு தலைமை தாங்கினார். அதன் பின்பு இனக்கலவரங்களினால் அகதிகளான மலையக மக்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதில் ஈடுபட்டு காந்தீயம் அமைப்பில் பணியாற்றினர். அகதிகளாக வெளியேறிய மலையக மக்களை தமிழீழப் பிரதேசத்தில் குடியமர்த்தும் சேவையில் வெலிக்கடையில் பலியாகிய டாக்டர் இராஜசுந்தரம் மற்றும் திரு டேவிட் ஆகியோரோடு தோளோடு தோள் நின்று உழைத்தார். காந்தியத்தில் ஊழல் மோசடிப் பேர் வழிகளோடு சதா போரிட்டவாறு காந்திய அமைப்பு திறம்பட செயல்புரிய பெரும்பணி ஆற்றினார்.

1981 ல் PLOT உருவானபோது அதன் தாபகர்களுள் தோழர் சந்ததியார் முக்கியமானவர். அன்றிலிருந்து ஆகஸ்ட், 1984ல் PLOT இலிருந்து வெளியேறும் வரை PLOT ன் அரசியல் பிரிவுக்கும் தோழர் சந்ததியாரே பொறுப்பாக விருந்தார். PLOT ன் ஆரம்பகாலத்திலிருந்தே கட்டுப்பாடு, நேர்மை, ஒழுக்கம், என்பனவற்றை PLOT இனுள் வலியுறுத்திவந்த தோழர் சந்ததியார் PLOT னுள்ளும் வெளியும் பல பிற்போக்கு சக்திகளின் தூற்றுதலுக்கும் அபாண்டங்களுக்கும் உள்ளானார்.

PLOT ஆரம்பித்த நாளிலிருந்து பெரும்பகுதி காலத்தை உமாமகேஸ்வரன் இந்தியாவிலேயே கழித்து வருகின்றார். இந்தியாவில் கூட இரண்டு தடவை கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். அப்படியிருந்தும் PLOT ஐ இந்தளவிற்கு அரசியல் ரீதியாக வளர்த்தது தோழர் சந்ததியாரின் தன்னலமற்ற உழைப்பேயாகும். சிறிலங்கா அரசினால் மோசமாகத் தேடப்பட்ட நிலையிலும் தமிழீழத்தில் வருடக்கணக்கில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு PLOT இனை வழிநடத்தி வந்த தோழர் சந்ததியார், PLOT ல் முற்போக்கு சக்திகளின் குரலாக ஒலித்தார்.

தோழர் சந்ததியார் PLOT ன் பிழையான போக்குகளைக் கண்டித்து PLOT னுள்ளே நடத்திய போராட்டங்கள் வெளியே பலருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. பலசந்தர்ப்பங்களில் PLOT ன் நலன்கருதி தன் சொந்த அபிலாசைகள், நலன்களை கைவிட்டு தன் அப்பழுக்கில்லாத உழைப்பை நிரூபித்திருக்கின்றார்.

தோழர் சந்ததியார் இன்று PLOT இனரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது உழைப்பில் வளர்ந்த இயக்கமே இன்று அவரைக் கைது செய்திருக்கின்றது. காந்தீயத்தின் பணிகளுக்கு உரிமை கோரிக்கொண்டு உமாமகேஸ்வரன் இன்று; காந்தீய அமைப்பில் முன்னின்று உழைத்த தோழர் சந்ததியாரை தனதுஉளவுப்படை மூலம் கடத்தி கைது செய்திருக்கின்றார்.

PLOT ன் பயிற்சி முகாமில் சித்திரவதைக்குள்ளாகி கொலை செய்யப்பட்டு வரும் தோழர்களின் குரலாக ஒலித்த தோழர் சந்ததியாரின் இறுதிக்குரலும் PLOT ன் சித்திரவதை முகாமிலேயே மடிந்து போகலாம். வளர்த்த கடா மார்பில் பாய்வதும் இதுதான் முதல்தடவை என்றில்லை.

## PLOT தோழர்களே!

உங்களுக்கு முன்னோடியாக நின்று; உங்களையே PLOT க்கு கொண்டுவந்து சேர்த்து: உங்களது வழிகாட்டியாக உழைத்த முன்னணித் தோழர்களான ராஜ்மோகன் (பண்டத்தரிப்பு), சிவனேஸ்வரன் (உடுவில்), அகிலன் (கண்ணாகய்), செல்வன் (திருகோணமலை), அரவன் (மூதூர்), பகவான் (உடுவில்) ... ... ... .. இந்த வரிசையில் இன்று தோழர் சந்ததியார்.

PLOT ன் இந்தப் பாசிச செயல்களை நீங்கள் நியாயப்படுத்துங்கள். ஆனால் நாளை இந்த மரணக் கயிறு உங்கள் கழுத்திலும் நிச்சயம் விழும். அப்போது எங்கே ஓடப் போகின்றீர்கள்?

உங்கள் அமைப்பினுள்ளேயே நடைபெறும் அநீதிகளுக்கு எதிராகப் போராடத் துணிவில்லாத நீங்கள் சிறிலங்கா அரசிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மெதிராகப் போரிடுவதாகக் கூறிக் கொள்வது நகைக்கத்தக்கது அல்லவா?

## தமிழீழ மக்களே!

சிறிலங்கா அரசின் இனவாத கொடுமைகளை இனம் கண்டு வெறுக்கும் அளவிற்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று புதிதாக அரங்கேறி வரும் PLOT இன் அராஜகங்களை சரிவர இனங்காணாதிருப்பது துர்ப்பலமே.

சிறிலங்கா அரசிற்கும் அதன் இராணுவத்திற்கும் எதிராக துப்பாக்கியை ஏந்த மறுக்கும் கழக இராணுவம் கழகத் தோழர்களுக்கும் சக இயக்கப் போராளிகளுக்கும் எதிராக தீவிரமான தாக்குதலில் ஈடுபடுவது சந்தேகிக்கப்பட வேண்டிய விடயமே!

விடுதலைப் போராளிகளைப் படுகொலை செய்வதும், விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்யும் நிகழ்வும், அடக்கி ஒடுக்கப்பட்ட முழு மக்களுக்கும் இழைக்கும் துரோகத்தனமும் எதிர்ப்புரட்சிகர நடவடிக்கையே என்பதில் ஐயமில்லை.

தமிழீழம்
அக்டோபர் 04 1985

தீப்பொறி

இத் துண்டுப்பிரசுரம் தீப்பொறி வெளியீட்டினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Tamils For A Democratic Eelam,
B.M Box 4338,
London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்